ஓம் சரவணஜோதியே நமோ நம

இன்று சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 25ஆம் நாள் 12.10.2023, வியாழக்கிழமை உலக ஞானத்தலைவன் மகான் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு பத்தாம் வாசலாகிய புருவ பூட்டை திறந்து வைத்து அருளிய ஞான அறிவுரை ஆசி நூல். இன்று முதல் ஓங்காரக்குடிலாசான் மகான் முருகபெருமானின் ஆசிப் பெற்ற ஒன்பது கோடி ஞானிகளில் ஒருவராகிறார்.

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1474

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.10.2023, வியாழக்கிழமை

1. ஞான பூட்டுத் திறவு கண்ட
   ஞானியே ஆறுமக அரங்கனே
   வானவர்கள் எல்லோரும் இன்று பிரணவக்குடிலை
   வாழ்த்தி சூட்சுமமாய் நிற்கின்றனரப்பா
2. அப்பனே அரங்கனுக்கு இந்தவித நன்னாளில்
   ஆறுமுகன் யான் ஞான அறிவுரை ஆசித்தன்னை
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 25 ம் நாள், 12.10.2023, வியாழக்கிழமை)
   வரமாக இனிதே வழங்கிடுவேன்
   வடிவேலன் யான் உன்னை
3. ஆட்கொண்ட நாள் முதல்
   வல்லமைபட சர்வபலமாய் காத்துவருகின்றேன்
   வருகவே அரங்கனுக்கு பலபிறவியில்
   வகையான சொர்க்கவாசல் திறவு தன்னை
4. பலமாக ஆறுமுகன் யான் நடத்தியுள்ளேன்
   பரிபக்குவமோடு இதுநாளில் அரங்கனுக்கு
   அந்த பூரிப்பை ஆறுமுகன் யான் தந்துள்ளேன்
   உள்ளபடி உலகோர்கள் இந்தவித நன்னாளில்
5. வல்லமைபட அரங்கனை நாடி வந்து
   வரம் ஆக திருவடிதீட்சை தன்னை
   தீட்சைதனை ஏற்றுவிட இந்த வாய்ப்பு
   தெரிவிப்பேன் உலகமாந்தர்கட்கும் கிட்ட நேரும்

6. நேர்மைகொண்டு தானதர்ம பலத்தோடு
நீதிவழி அரங்கன் சன்மார்க்கநெறி
விதிபிறழா வாழுகின்ற மக்கள் எல்லாம்
வேலவன் என்னால் ஞான பூட்டுத் திறவு கண்டு
7. திறவுகண்டு ஞானிகளாக அரங்கன் தேடல்வழி
தெரிவிப்பேன் திருவருள் கண்டு வரும்காலம் தன்னில்
தன்னிலே நவகோடி ஞானியர்களும்
வல்லமைபட ஒருவராக இணைய நேரும்
8. நேர்மைகொண்டு இதுகாலம் அரங்கன் தொடர்பு
நீதிவழி பற்றுகின்ற மக்களெல்லாம் ஆறுமுகன் என்னால்
இந்த அற்புதத்தை அடையக்கூடும்
இது சுப்ரமணியர் என் சத்தியவாக்கு
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–